10.புரட்டாதி, 2021 பக்கங்கள்- 04

பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்



0776906182

தினப்புயல்
PTN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்




T.P- 0770457661

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 01

# இலங்கையினூடாக தீவிரவாதிகள் ஊடுருவலாம் - தாக்குதல் சம்பவமும் இடம்பெறலாம் என எச்சரிக்கும் சர்வதேச நாடுகள்



இலங்கையில் இடம்பெற்ற ஈஸ்டர் தினக் குண்டுத்தாக்குதலின் கோரத்தால் சுமார் 300இற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் பலியானதுடன் பலர் காயமடைந்தனர். இந்நிலையில் இத்தாக்குதல் தொடர்பாக பலர் கைது செய்யப்பட்டதுடன் தொடர் விசாரனைகளும் இடம்பெற்றுவரும் நிலையில் மீண்டுமொரு அவ்வாறான தாக்குதல் இடம்பெறலாம் என அமெரிக்கா அண்மையில் எச்சரித்துள்ளது.

இதேவேளை ஆப்கானிஸ்தான் தற்பொழுது தலிபான் தீவிரவாதிகளால் முற்றாக கைப்பற்றப்பட்ட நிலையில் தற்பொழுது ஆப்கானிஸ்தானில் அமெரிக்க கூட்டுப்படைகள் வெளியேற்றம், தலிபான் பயங் கரவாதிகளுடன் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளின் நெருக்கம் என்பன இலங்கைக்கு அச்சுறுத்தலான விடயமாக பார்க்கப்படுவதுடன், அண்மையில் நியூசிலாந்தில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலுடன் சம்பந்தப்பட்டவர் இலங்கையின் கிழக்கு மாகாணத்தை சேர்ந்தவர். இச்சம்பவத்துக்குப் பின்னர் இந்தியாவும் ஓர் எச்சரிக்கையை விடுத்துள்ளது.

அதாவது இலங்கை கடற்பரப்பின் ஊடாக தமது நாட்டுக்குள் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் ஊடுருவலாம் என அச்சம் வெளியிட்டுள்ளதுடன், தமது கடல் பாதுகாப்பை அதிகரித்துள்ளதுடன் இலங்கை அரசுக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளது. தற்பொழுது கொரோனா வைரஸ் தாக்கத்தால் இலங்கை பொருளாதாரம். உயிரிழப்பு, தொற்றாளர் எண்ணிக்கை என சிக்கித்தவிக்கும் இந்நேரத்தில், பயங்கரவாதத் தாக்குதல் எச்சரிக்கையானது பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. இதனை ஓர் எச்சரிக்கை என கணக் கெடுக்காமல் பாகாப்பைப் பலப்படுத்த வேண்டியது அவசியமாகும். நாட்டில் மீண்டுமொரு தாக்குதலை சந்தி க்கும் நிலை ஏற்படக்கூடாது. ஜனாதிபதி கோட்டபாய அவர்கள் இராணுவ ரீதியாக நாட்டைப் பலப்படுத்தியுள்ள நிலையிலும், கடல் பகுதிகளை முழு உசார் நிலையில் வைத்திருத்தல் அவசியமாகும். அத்துடன் பொது மக்களும் மிகவும் விழிப்புடன் இருப்பதும் அவசிய மாகும். எமது நாட்டில் இனியொரு பயங்கரவாத தாக்குதல் இடம்பெறுவதற்கு சகல பிரஜைகளும் இடமளிக்கக்கூடாது என்பதே எமது நாட்டுக்கு நாம் செய்யும் கடமையாகும்.

**நாட்டில் மேலும் 175 கொவிட் மரணங்கள் நேற்று (09.09.2021) பதிவாகி யுள்ளன. இதற்கமைய நாட்டில் பதிவாகியுள்ள கொவிட் மரணங்களின் மொத்த எண்ணி க்கை 10,864 ஆக அதிகரித்துள்ளது. உயிரிழந்தோரில் 96 ஆண்களும், 79 பெண்களும் அடங்குகின்றனர். அத்துடன் இன்று 2856 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது. இதற்கமைய இதுவரை அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 477,636 ஆக அதிகரித்துள்ளது.**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## வீட்டுத் தோட்டம் செய்வோம் – நலமுடன் வாழ்வோம்


இன்று உலகம் முழுவதும் கொவிட் பரவலால் பாதிக்கப்பட்டு நாடுகள் பொருளாதார ரீதியாக பாரிய வீழ்ச்சியினைக் கண்டிருக்கும் இவ் துர்ப்பாக்கிய நிலையில். மக்களும் கையில் பணம் இல்லாமல். இருந்தாலும். வாங்குவதற்கு வெளியில் நடமாட முடியாமல். பொருட்கள் இல்லாமல் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பல உலக நாடுகளில் பட்டினி தலைவிரித்தாடுகிறது. பசியால் இலட்சக்கணக்கில் குழந்தைகள் வாடுகின்றனர். போசாக்கான உணவு இல்லாமல் தமது வாழ்நாளைக் கடத்துகின்றனர் என்றெல்லாம் ஆய்வுகள் கூறுகின்றன. இலங்கையைப் பொறுத்தவரை தனிமைப்படுத்தல் ஊரடங்கு கொவிட் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அடிக்கடி அமுல்படுத்தப்படுகிறது. அரசின் உர இறக்குமதித் தடையால் விவசாயிகள் மரக்கறிகளை உற்பத்தி செய்வதில் பாரிய சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளனர்.

நாம் தற்போது தொழில்களுக்குச் செல்ல முடியாமல். போக முடிந்தும் கொவிட் அச்சம் காரணமாக பலர் வேலைகளை விட்டுவிட்டு வீடுகளில் முடங்கியிருப்பதைக் காண்கிறோம். இந்த காலத்தையாவது பயன்மிக்கதாக மாற்றலாம். எமது அன்றாட வீட்டுத்தேவைக்காகப் பயன்படுத்தும் மரக்கறி வகைகளை நாமே வீட்டில் உற்பத்தி செய்யலாம். எமது குழந்தைகளுக்கும் வீட்டுத்தோட்டத்தின் அவசியம் குறித்து இந்த காலத்தினை ஒப்பிட்டு நன்கு புரிய வைக்கலாம்.

அவர்களையும் ஊக்குவிக்கலாம். வெறுமனே வீடுகளில் இருந்து தொலைக்காட்சியையும். தொலைபேசியையும் பார்த்துக் கொண்டிருக்காமல். வீட்டுத் தோட்டம் என்கிற விடயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுங்கள். ஆரோக்கியமான உணவு கிடைக்கும்.

# நாசா படைக்கவுள்ள சாதனை




ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைநோக்கியானது இதற்கு முன்பு செலுத்தப்பட்ட தொலைநோக்கிகளைவிட அதிகளவு திறன் கொண்டது. அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா. விண்வெளி ஆராய்ச்சிக்காக. 10 பில்லியன் டொலர் செலவில் ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைநோக்கியை உருவாக்கி உள்ளது.

அடுத்த தலைமுறை விண்வெளி தொலைநோக்கியாக கருதப்படும் ஜேம்ஸ் வெப் தொலைநோக்கியை. வரும் டிசம்பர் 18ம் திகதி செலுத்தி விண்வெளியில் நிலைநிறுத்தப்படும் என நாசா தெரிவித்துள்ளது. பிரெஞ்சு கயானா வில் உள்ள ஏவுதளத்தில் இருந்து ஏரியன்-5 ராக்கெட் மூலம் தொலைநோக்கி விண்ணில் செலுத்தப்படுகிறது. இந்த தொலைநோக்கி. தற்போது கலிபோர்னியாவின் ரெடோண்டோ கடற்கரையில் உள்ள ஒப்பந்த நிறுவனமான. நார்த்ரோப் க்ரும்மனின் ஆய்வுக்கூடத்தில் வைக்கப்பட்டுள்ளது. விரைவில் அங்கிருந்து ஏவுதளத்திற்கு அனுப்பப்பட உள்ளது.

இந்த தொலைநோக்கியானது. ஸ்பிட்சர் விண்வெளி தொலைநோக்கி மற்றும் 1990ஆம் ஆண்டு விண்ணில் ஏவப்பட்ட ஹபிள் விண்வெளித் தொலைநோக்கி போன்று இருந்தாலும் அவற்றைவிட அதிகளவு திறன் கொண்டது. விண்வெளியில் இருக்கும் அகச்சிவப்பு கதிர்களைக் கொண்டு ஆராய்ச்சி செய்து பூமிக்கு அதன் முடிவுகளை அனுப்பும் திறன் கொண்டிருக்கும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது. இது பூமியிலிருந்து சுமார் 15 லட்சம் கிலோமீட்டர் தொலைவில் நிலை நிறுத்தப்பட உள்ளது. ஜேம்ஸ் வெப் தொலைநோக்கியில் அமைக்கப்பட்டுள்ள தொலைநோக்கி மூலம் தொலைதூரத்தில் இருக்கும் சிறிய கிரகங்களையும் நட்சத்திரக்கூட்டங்களையும் காண முடியும். இதன் மூலம் விண்வெளியில் இருக்கும் பல புதிர்களுக்கு விடைகிடைக்கும் என்று கூறப்படுகிறது.

## ஊரடங்கு நீடிக்கப்படுமா?

**நாடு முழுவதும் எதிர்வரும் 13ம் திகதி வரை அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை நீடிப்பதா? இல்லையா? என்பது குறித்த தீர்மானம் இன்று (10) எடுக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

**ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஸ தலைமையில் கொவிட்-19 தடுப்புக்கான செயலணி இன்று கூடவுள்ளது. இந்த கூட்டத்திலேயே, தீர்மானம் எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.**


**இலங்கையில் கொரோனா தொற்று அதிகரித்திருந்த நிலையில், கடந்த மாதம் 20ம் திகதி முதல் கடந்த மாதம் 30ம் திகதி வரை முதற்கட்ட ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது. எனினும், கொவிட் நிலைமை கட்டுப்பாட்டிற்குள் வராத பின்னணியில், 30ம் திகதி முதல் 6ம் திகதி வரை அந்த ஊரடங்கு நீடிக்கப்பட்டது.**

**அந்த நிலையிலும், கொரோனா கட்டுப்பாட்டிற்குள் வராத நிலையில், ஊரடங்கு எதிர்வரும் 13ம் திகதி அதிகாலை 4 மணி வரை நீடிக்க ஜனாதிபதி தலைமையிலான கொவிட்-19 தடுப்பு செயலணி தீர்மானித்தது. கொரோனா மரணங்கள் 200ஐ தாண்டி கடந்த காலங்களில் பதிவாகியிருந்ததுடன், கடந்த ஓரிரு தினங்களாக அந்த எண்ணிக்கை 185 வரை குறைவடைந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. இந்த நிலையில், கடந்த வார அறிக்கைகளை ஆராய்ந்து, இன்றைய தினம் ஊரடங்கை நீடிப்பதா? இல்லையா? என்ற தீர்மானம் எட்டப்படும் என சுகாதார தரப்பு தகவல்கள் குறிப்பிடுகின்றன.**

## ஆப்கானிஸ்தான் ஊடகவியலாளர்கள் மீது தலிபான்கள் தாக்குதல்

ஆப்கானிஸ்தான் தலைநகரில் பெண்கள் உரிமைப் போராட்டத்தை ஒளிபரப்பும்போது தலிபான்களால் நேமத் நக்தி மற்றும் தகி தர்யாபி ஆகியோர் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இரண்டு ஆப்கானிஸ்தான் பத்திரிக்கையாளர்களை கைது செய்து கடுமையாக தாக்கியதற்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. ஆப்கானிஸ்தான் தலைநகரில் காபூலைச் சேர்ந்த Etilaat-e Roz என்ற ஊடக நிறுவனத்தைச் சேர்ந்த நேமத் நக்தி மற்றும் தகி தர்யாபி ஆகியோர் தலிபான்களால் தடுத்து வைக்கப்பட்டு தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. காபூலில் உள்ள ஒரு காவல் நிலையத்தில் இருவரும் தனித்தனி அறைகளில் வைக்கப்பட்டனர். அங்கு தலிபான் அதிகாரிகள் அவர்களை கேபிள்களால் கடுமையாக தாக்கினர். விடுவிக்கப்பட்ட பின்னர் இருவரும் முதுகு மற்றும் முகத்தில் காயங்களுக்கு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர். ஹியூமன் ரைட்ஸ் வோட்ச். தலிபான்கள் போராட்டக்காரர்கள் மற்றும் பத்திரிகையாளர்களுக்கு எதிரான அனைத்து தாக்குதல்களையும் நிறுத்த வேண்டும் எனக் கூறியுள்ளது.





# கொரோனா பிரிவுக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கி வைப்பு




(நூருல் ஹுதா உமர்)

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு சுமார் 25 லட்சம் ரூபாய் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் கடல் கடந்து வாழ் கல்முனை உறவுகளி னால் நேற்று வழங்கி வைக்கப்பட்டது. நாட்டில் தற்போது கொரோனா தொற்று அதிகரித்து வரும் நிலையில் பலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். அம்பாறை மாவட்டம் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் அமையப்பெற்றுள்ள கொரோனா தடுப்பு சிகிச்சை நிலையத்திற்கு சில மருத் துவ உபகரணங்களின் அவசியத் தேவை கருதி வைத்தியசாலையினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய எமது உறவுகளை பாதுகாக்க நாமும் பங்காளராவோம் எனும் தொனிப் பொருளில் இந்த உபகரணங்கள் வழங்கப் பட்டது.

கல்முனைக்கான வளைகுடா அமையத்தினால் (1,254,000) ரூபாய் பெறுமதியான Non-Intensive Ventilator (CPAP & BiPAP) - 01, Pulse oximeter - rossmax - 06 மற்றும் கல்முனை, சாய்ந்தமருது பிரதேசத்தை சேர்ந்த ஜப்பான் நாட்டில் வசிப்போரின் நிதி பங்களிப்புடன் (1,200,000) ரூபாய் பெறுமதியான Non-Intensive Ventilator (CPAP & BiPAP) - 01 குறித்த மருத்துவ உபரணங்கள் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஏ.எல்.எம்.எப்.றகுமானிடம் குறித்த அமைப்பின் உறுப்பினர்களால் (09) அன்று உத்தியோகபூர்வமாக அன்பளிப்பு செய்யப்பட்டது. மேலும் இதன் போது வைத்தியர்களான எம்.எம்.ஹபிலுல் இலாஹி, ஏ.ஆர்.எம்.ஹாரிஸ், ஏ.எல்.பாறுக், என்.சுகைப் ஆகியோரும் கலந்து கொண்டனர்.




# தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் இராஜினாமா

தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஹிஷினி விக்கிரமசிங்க தனது பதவியில் இருந்து இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார். தனிப்பட்ட காரணத்திற்காக அவர் பதவி விலகுவதாக அறிவித்துள்ளார் என வனவிலங்கு இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# 2,000 ரூபா கொடுப்பனவு : தகுதியானவர்கள் மேல் முறைமீடு செய்ய சந்தர்ப்பம்

அம்பாறை மாவட்டத்தில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தின் கீழ் வருமானத்தை இழந்தவர்களுக்காக, அரசாங்கத்தினால் வழங்கப்படும் 02 ஆயிரம் ரூபாய் மானியக் கொடுப்பனவு பட்டியலில் பெயர் உள்ளடக்கப்படாதவர்கள், அதனை பெறுவதற்காக மேன்முறையீடு செய்ய முடியும்.

மேன்முறையீடு செய்வதற்கான விண்ணப்பப்படிவத்தை உரிய முறையில் பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களில் ஒப்படைக்கலாமென அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் தெரிவித்துள்ளார்.

இந்த கொடுப்பனவுக்காக அம்பாறை மாவட்டத்திலுள்ள 20 பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து 46 ஆயிரத்தி 581 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

குறைந்த வருமானமுடைய வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்கள், சமுர்த்தி பெறுவதற்கு காத்திருப்பு பட்டியலில் உள்ளோர் மற்றும் நாளாந்த வருமானத்தை இழந்த குடும்பங்கள், சமுர்த்தி நிவாரணம் பெறாத ஆனால் சமுர்த்தி நிவாரணம் பெறத்தகுதியான குடும்பங்கள் ஆகியோர் இந்த கொடுப்பனவை பெறுவதற்கு தகுதியானவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# டெல்டா ஆபத்தான வைரஸ் – அவதானம் தேவை

வீரியம் மிக்க பரவல் தன்மையுடைய டெல்டா வைரஸ் திரிபானது, முழுமையாக தடுப்பூசிகளை செலுத்திக் கொண்டவர்களுக்கும் தொற்றக்கூடிய நிலை உள்ளதாக, உலகெங்கும் உள்ள விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

இவ்வாறாக மேற்கொள்ளப்பட்ட புதிய ஆய்வின் தகவல் 'நேச்சர்' சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ளது.

டெல்டா திரிபானது, மனிதர்களின் நோய் எதிர்ப்பு கட்டமைப்பை கடந்துசெல்லக்கூடியது என அதில் மீண்டும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையை மேற்கோள்காட்டி கருத்து தெரிவித்துள்ள ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மூலக்கூறு உயிரியல் துறை பிரிவின் பேராசிரியர் சந்திம ஜீவந்தர, டெல்டா கொரோனா திரிபுக்கு, இவ்வாறாக நோய் எதிர்ப்பு கட்டமைப்பை கடந்து செல்லக்கூடிய ஆற்றல் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

எனவே, தடுப்பூசி ஏற்றத்தின் பின்னரும், கொவிட்-19 தொற்று உறுதியாவதை தவிர்ப்பதற்கு, சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றவேண்டியதன் முக்கியத்துவத்தை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# NMRAயின் தரவுகளை அழித்த CEO பிணையில் விடுவிப்பு

மருந்துகள் ஒழுங்குப்படுத்தல் அதிகாரசபையின் தரவுகள் அழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட தனியார் கம்பனியின் தலைமை நிர்வாக அதிகாரி பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் (09) முற்படுத்தப்பட்டபோது இந்த பிணை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தரவுகளை முகாமைத்துவம் செய்த தனியார் கம்பனியின் குறித்த தலைமை நிர்வாக அதிகாரி (08) குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

# பெண்கள் கிரிக்கெட் விளையாடத் தடை – அறிவிப்பால் சர்ச்சை



ஆப்கானிஸ்தானை முழுமையாக தங்கள் கட்டுப் பாட்டுகள் கொண்டுவந்துள்ள தலிபான்கள், இடைக்கால அரசை அறிவித்தனர். இதில் தற்காலிக பிரதமராக முல்லா முகமது ஹஸன் அகுந்த் நியமிக்கப்பட்டுள்ளார். தற் காலிக துணை பிரதமர்களாக முல்லா அப்துல் கனி பராதர் மற்றும் மவுல்வி அப்துல் சலாம் ஹனாபி ஆகியோர் நிய மிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், தலிபான்கள் பயங்கரவாத அமைப்பின் கலாச்சார பிரிவின் துணைத் தலைவர் அஹமதுல்லா வாசிக், பெண்கள் விளையாட்டில் பங்கேற்பது அவசிய மில்லை என்று கருதுகிறோம். குறிப்பாக கிரிக்கெட் விளை யாடுவது தேவையற்றது.

கிரிக்கெட்டில் பெண்கள் பங்கேற்றால் அவர்க ளின் உடல், முகம் ஆகியவை மூடப்படாது. அனைவரும் பார்க்கும் வகையில் உடல் உறுப்புகள் தெரியக்கூடும். இதுபோன்று பெண்கள் ஆடை அணிவதை இஸ்லாம் அனுமதிப்பதில்லை. இன்றைக்கு இருக்கக்கூடிய ஊடக உலகத்தில் புகைப்படங்கள், வீடியோக்கள் அதிகமாக பகிரப்படுவதால், இதனை அனைவரும் பார்க்கக்கூடும். இஸ்லாம் மற்றும் இஸ்லாமிய அரசு, கிரிக்கெட் போன்ற விளையாட்டுகளை பெண்கள் விளையாடுவதை அனு மதிக்காது. இப்போதுள்ள சூழலில் பெண்கள் கிரிக்கெட் மட்டுமல்ல எந்த விளையாட்டும் விளையாடுவது பாதுகாப் பானது அல்ல எனக் கூறியுள்ளார்.

# உலக சுகாதார அமைப்பு கண்டனம்

'வளர்ந்த நாடுகளிடம் உள்ள தடுப்பூசி மிச்சங்களை கொண்டு ஏழை நாடுகள் தங்களின் தேவையை நிறைவேற்றி கொள்ளட்டும் என்ற மனப்பான்மை ஏற்புடையது அல்ல' என. உலக சுகாதார அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் டெட்ரோஸ் அதோ னம் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது. மருந்து நிறுவனங்கள் சில தினங்களுக்கு முன் தடுப்பூசிகள் இருப்பு பூஸ்டர் டோசை எதிர் கொள்ளவே போதுமானதாக இருக்கிறது என்று கூறின. அந்த மருந்து நிறுவனங்களின் அலட்சியம் என்னை கோபப்படுத்தி உள்ளது. கொவிட் தடுப்பூசி விநியோகத்தில், வளர்ந்த நாடுகளிடம் அபரிமிதமாக இருக்கும் மிச்சங்களைக் கொண்டு. ஏழை நாடுகள் தங்களின் தேவையை நிறை வேற்றிக் கொள்ளட்டும் என்ற மனப்பான்மையில். வளர்ந்த நாடுகளும் மருந்து நிறுவனங்களும் செயல்படுகின்றன. இது ஏற்புடையது அல்ல. அப்படிப்பட்டவர்கள் நடத்தையைப் பொறுத்துக் கொண்டு அமைதி காக்க மாட்டேன்.

இந்த ஆண்டு இறுதி வரையிலாவது வளர்ந்த நாடுகள் மூன்றாம் டோஸ் தடுப்பூசியை நிறுத்திவைக்கலாம். இதனால். உலகளவில் அனைத்து நாடுகளுமே குறைந்தபட்சம் தங்கள் மக்களில் 40% பேருக்கு தடுப்பூசி செலுத்த முடியும். இதுவரை உலகளவில் 5.5 பில்லியன் தடுப் பூசி பயன்படுத்தப்பட்டு உள்ளன. இவற்றில் 80% தடுப்பூசிகள் வளர்ந்த நாடுகளால் மட்டுமே பயன்படுத்தப்பட்டு உள்ளன என அவர் தெரிவித்தார்.



# தமிழகத்திற்கு ரூ.183.67 கோடி விடுவிப்பு



17 மாநிலங்களுக்கு 6வது தவணையாக ரூ.9,871 கோடி வருவாய் பற்றாக்குறை நிதியை மத் திய அரசு விடுவித்துள்ளது. தமிழகத்திற்கு ரூ.183.67 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. மத்திய – மாநில அரசுகளுக்கிடையே வருவாயை பகிர்ந்து கொள்வது தொடர்பான பரிந்துரைகளை மத்திய அரசுக்கு நிதிக் குழு வழங்கும். வருவாயை விட செலவினம் அதி கமாகக் காணப்படும் மாநிலங்களுக்கு வருவாய்ப் பற்றாக்குறை நிதியை வழங்குவதற்கு நிதிக் குழு பரிந் துரைக்கும். அவ்வாறு வழங்கப்படும் நிதி மாநிலங்க ளின் நிதி பற்றாக்குறையை சமாளிக்க உதவும்.

அதன்படி, 15வது நிதிக் குழு அளித்த பரிந்துரை யின் அடிப்படையில் தகுதிவாய்ந்த 17 மாநிலங்களு க்கு மத்திய அரசு வருவாய் பற்றாக்குறை நிதியை மாதந்தோறும் ஒவ்வொரு தவணைகளாக விடுவி த்து வருகிறது. இந்நிலையில், 6வது தவணையாக தமிழகம், ஆந்திரா, அசாம், ஹரியானா, இமாச்சல் பிரதேசம், கர்நாடகா, கேரளா, மணிப்பூர், மேகா லயா, மிசோரம், நாகாலாந்து, பஞ்சாப், ராஜஸ்தான், சிக்கிம், திரிபுரா, உத்தரகண்ட், மேற்குவங்கம் ஆகிய 17 மாநிலங்களுக்கு ரூ.9,871 கோடியை வருவாய் பற்றாக்குறை நிதியாக மத்திய அரசு விடுவித்துள்ளது. இந்த 17 மாநிலங்களுக்கும் மொத்தமாக இதுவரை ரூ.59,226 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.